**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.127/2023 DW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஜேக் கபீர் | த-பெ /க.பெ. | |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | | வட்டம்: | |
| தொழில்: | : | | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.06.2026**

---

**25.06.2026**

**முதல் விசாரணை :**

1) நம்பர்.3 திருமயம் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விலாசத்தில் நான் தாயார் மற்றும் சகோதரர்களுடன் உள்ளேன். எதிரி என் தாயார் ஆவார். புகார்தாரர் எனது தூரத்து உறவினர் ஆவார். கடந்த 01.12.2022 ல் எனது தந்தையின் சிகிச்சைக்காக 3, 50,000/- புகார்தாரர் சித்திக்கிடமிருந்து கடனாக இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் கடனாக பெற்றேன். பணம் வாங்கும் போது எனது தாயாரின் பூர்த்தி செய்யாத காசோலையை கொடுத்தோம். கடன் தொகையை 29.04.2023 ல் ரொக்கமாக புகார்தாரர் சித்திக் என்பவரிடம் ரூ.3,50,000/- கொடுத்தேன். ரொக்கமாக கேட்டதால் ரொக்கமாக கொடுத்தேன். பணம் கொடுக்கும் போது காசோலையை திருப்பிக் கேட்டேன். அதற்கு அவர் காசோலை அலமாரியில் உள்ளது. இரண்டு நாட்களில் தருவதாக கூறினார். அதன்பின்பும் காசோலையை இரண்டு, மூன்று முறை கேட்டேன். ஆனால் அதை தராமல் காலம் தாழ்த்தி வந்தார். அதன்பின்பு காசோலை பயன்படுத்தப்பட்டது என்று கூறி எனது தயார் வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றார். அதிக வட்டி பெற வேண்டும் என்பதற்காக மற்றும் குடும்ப

கௌரவத்தை குறைப்பதற்ககாக புகார்தாரர் எனது தாயார் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது தந்தை காட்டுபா அவர் கடந்த 20.05.2023 ல் காலமானார். காட்டுபாவின் இறப்புச்சான்றிதழ் ஏ.ம.சா.ஆ.2 ஆக குறியீடுப்படுகிறது. எனது தாயாரின் மீது தாக்கல் செய்துள்ள பொய்யான வழக்கு மற்றும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**குறுக்கு விசாரணை**

( புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் காலம் கேட்டுக்கொண்டதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.25 03:33:43 -0400

நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம், காரைக்குடி.